# ஆகஸ்ட் - 22 - செவ்வாய்
## பேரரசி தூய மரி அன்னை

**“நல்லதையே ஆண்டவர் அருள்வார்”திபா -85: 12**

## முதல் வாசகம் : நீதிபதிகள்6 : 11 – 24

பின்பு ஆண்டவரின் தூதர் ஒபிராவில் உள்ள ஒரு கருவாலி மரத்தடியில் வந்து அமர்ந்தார். அந்த மரம் அபியேசர் குடும்பத்தவரான யோவாசுக்குச் சொந்தமானது. அவர் மகன் கிதியோன், மிதியானியரிடமிருந்து கோதுமையை மறைப்பதற்காக, திராட்சை ஆலையில் கதிர்களை அடித்துக் கொண்டிருந்தார். ஆண்டவரின் தூதர் அவருக்குத் தோன்றி, ”வலிமை மிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்” என்றார்.கிதியோன் அவரிடம், ”என் தலைவரே! ஆண்டவர் எம்மோடு இருக்கிறார் என்றால் ஏன் இவையெல்லாம் எமக்கு நேரிடுகின்றன? ஆண்டவர் எம்மை எகிப்து நாட்டிலிருந்து வெளியே கொண்டு வரவில்லையா என்று கூறி, எங்கள் தந்தையர் எமக்கு வியந்துரைத்த அவரது வியத்தகு செயல்களெல்லாம் எங்கே? இப்பொழுது ஏன் ஆண்டவர் எம்மை இப்படிக் கைவிட்டுவிட்டார்? எம்மை மிதியானியரின் கைகளில் ஒப்படைத்துவிட்டாரே!” என்றார்.ஆண்டவர் அவர் பக்கம் திரும்பி, ”உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய். மிதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நான் அல்லவா?” என்றார்.கிதியோன் அவரிடம், ”என் தலைவரே! எவ்வழியில் நான் இஸ்ரயேலை விடுவிப்பேன்! இதோ! மனாசேயிலேயே நலிவுற்று இருப்பது என் குடும்பம். என் தந்தை வீட்டிலேயே நான்தான் சிறியவன்” என்றார்.ஆண்டவர் அவரிடம், ”நான் உன்னோடு இருப்பதால் நீ தனி ஒரு ஆளாக மிதியானியரை வெல்வாய்” என்றார்.கிதியோன், ”உம் பார்வையில் எனக்குத் தயவு கிடைத்துள்ளது என்றால், நீர்தான் என்னுடன் பேசுகிறவர் என்பதற்கு அடையாளம் ஒன்று காட்டும்.நான் உம்மிடம் திரும்பிவந்து எனது உணவுப் படையலைக் கொண்டு வந்து உம் திருமுன் வைக்கும்வரை இவ்விடத்தைவிட்டு அகலாதீர்” என்றார். அவரும், ”நீ திரும்பும்வரை நான் இங்கேயே இருப்பேன்” என்றார்.கிதியோன் வந்து ஆட்டுக் குட்டியையும், இருபதுபடி அளவுள்ள ஒரு மரக்கால்” மாவால் புளியாத அப்பத்தையும் தயார் செய்தார். பிறகு அவர் இறைச்சியை ஒரு கூடையிலும், குழம்பை ஒரு சட்டியிலும், எடுத்துக்கொண்டு அந்தக் கருவாலி மரத்தடிக்கு வந்து அவரிடம் கொடுத்தார்.கடவுளின் தூதர் அவரிடம், ”இறைச்சியையும் புளியாத அப்பத்தையும் கொண்டு வந்து இப்பாறைமீது வைத்துக் குழம்பை ஊற்று” என்றார். அவரும் அவ்வாறே செய்தார்.ஆண்டவரின் தூதர் தம் கையிலிருந்த கோலின் முனையால் இறைச்சியையும் புளியாத அப்பத்தையும் தொட்டார். பாறையிலிருந்து நெருப்பு எழும்பி, இறைச்சியையும் புளியாத அப்பத்தையும் எரித்தது. ஆண்டவரின் தூதர் அவர் பார்வையிலிருந்து மறைந்தார்.அப்போது கிதியோன் அவர் ஆண்டவரின் தூதர் என அறிந்து கொண்டார். கிதியோன், ”ஐயோ! இவர் என் தலைவராகிய ஆண்டவர்! ஆண்டவரின் தூதரை நேருக்கு நேராக நான் பார்த்துவிட்டேனே!” என்றார்.ஆண்டவர் அவரிடம், ”உனக்கு நலமே ஆகுக! அஞ்சாதே! நீ சாகமாட்டாய்” என்றார்.கிதியோன் அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டி எழுப்பினார். அதை ”நலம் நல்கும் ஆண்டவர்” என அழைத்தார். அது இந்நாள் வரை அபியேசர் குடும்பத்தவருக்குச் சொந்தமான ஒபிராவில் உள்ளது.

**பதில்பாடல் :** இறைவன் தம் மக்களுக்கு நிறைவாழ்வை வாக்களிக்கின்றார்

## நற்செய்தி : மத்தேயு19 : 23 – 30

அக்காலத்தில்இயேசு தம் சீடரிடம், ”செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன் செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது” என்றார்.சீடர்கள் இதைக் கேட்டு, ”அப்படியானால் யார்தாம் மீட்புப் பெறமுடியும்?” என்று கூறி மிகவும் வியப்படைந்தார்கள்.இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, ”மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்” என்றார்.அதன் பின்பு பேதுரு இயேசுவைப் பார்த்து, ”நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே எங்களுக்கு என்ன கிடைக்கும்?” என்று கேட்டார்.அதற்கு இயேசு, ”புதுப்படைப்பின் நாளில் மானிட மகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது என்னைப் பின்பற்றிய நீங்களும் இஸ்ரயேல் மக்களின் பன்னிரு குலத்தவர்க்கும் நடுவர்களாய்ப் பன்னிரு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.மேலும் என்பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நிலபுலன்களையோ விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப் பேறாக அடைவர்.ஆனால் முதன்மையானோர் பலர் கடைசியாவர். கடைசியானோர் பலர் முதன்மையாவர்” என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** தூய அன்னை மரியாவை அரசி என அன்னையாம் திருச்சபை இன்றைய நாளில் பெருமைப்படுத்துகின்றது. அதற்கமைவாக, நுகர்வுக்கலாச்சார விஞ்ஞானம் வேகமாக வளரும் இன்றைய சூழலில் “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது“ (மத்தேயு19:24) எனப்படும் ஆண்டவர் இயேசுவின் அழியா நற்செய்தி மிகவும் பொருத்தமானதாகத் தோன்றுகிறது. இன்று அறிவாற்றலும், வாணிபத்திறமையும், செல்வமும் வளர்ந்து செருக்கும், தீமைகளும் கூடவே பெருகுகின்றன. மனிதன் இறைவனை விட்டுப்பிரிந்து, செருக்குடன் வாழ்வதற்கான சோதனைகளும் பெருகிவருகின்றன. ஆண்டவர் இயேசு தமது அழியாத வார்தைகளால் நமக்கு விடுக்கும் எச்சரிக்கையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு இறைவனைவிட்டுப் பிரிந்து நாம் எதுவும் செய்ய இயலாது என்பதை அன்னை மரியாபோல நாமுணர்ந்து நம்மையே தாழ்த்திக்கொள்ள இன்றைய நற்செய்தி எமக்கு அழைப்பு விடுக்கின்றது. இயேசுவைப் பின்பற்றும் ஆவலோடு வந்த செல்வந்தனுக்கு சொத்தையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு இயேசுவைப் பின்செல்ல துணிவு இருக்கவில்லை. அந்த உரையாடலின் பின்னணியில் செல்வம் இருந்தால் இறையாட்சியில் புகமுடியாது என்பதற்குப் பதிலாக, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதென எடுத்துச்சொல்லி புரியும் விதத்தினில் ஆண்டவர் இயேசு விளக்கமளிக்கின்றார். எமது அன்றாட வாழ்விற்குப் பணம் தேவை. ஆயினும் தேவைக்கு மிஞ்சியதை அளவிற்கு அதிகமாக சேகரித்து வைத்திட முற்படும்போது எமது மனங்களிலே அகந்தை, ஆணவம், வறட்டுக் கௌரவம், வேறுபாடு, வித்தியாசம் போன்ற எண்ணங்கள் குடியேறி எம்மை மற்றவர்களிடம் இருந்து பிரித்து மனித மாண்புக்கு எதிரான செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. உடன்பிறந்த சகோதரர்களிடமே குற்றம்கண்டு கறைபடுத்துகின்றது. அவ்வாறான செல்வச் செருக்குமிக்க வாழ்வு வாழ்பவர்கள் இறையாட்சிக்கு உட்பட முடியாது என்பதனை ஆண்டவர் இயேசு மிக அழகாகத் தெளிவுபடுத்துகின்றார். மிகச்சிறிய ஊசியின் காதில் ஒட்டகம் என்ற உயர்ந்த மிருகம் எவ்வாறு நுழைய முடியாதோ, அதைப்போலவே தங்களது பணத்திமிரால் சமூகத்தில் உயர்ந்த மனிதர்கள் என்று மிருகங்களாக மாறிப் போனவர்களும் நுழைந்திடவே முடியாது என்று தெளிவுற விளக்குகின்றார். எனவே எம்மிடம் இருப்பதை பகிர்வோம். இல்லாதவர்கள் என்ற நிலை ஒழிப்போம். இறையாட்சியை கட்டியெழுப்புவோம்.